**1. சமஸ்கிருத கல்வெட்டுக்களின் காலம் எது?**

முதல் சமஸ்கிருத கல்வெட்டின் காலம் கிபி இரண்டாம் நூற்றாண்டு என்பதாக முனைவர் தெய்வநாயகம் முனைவர் தேவகலா மற்றும் அவர்களை பின்பற்றுவோர் மேலும் சில தமிழ் அறிஞர்கள் என தம்மைக் கருதிக்கொள்பவர்கள் கூறி வருகின்றனர். இது முற்றிலும் தவறானது. மிகப் பழமையான சமஸ்கிருத கல்வெட்டுக்கள் அயோத்தியிலும் கோசுண்டியிலும் ஹத்தி பாதாவிலும் கிடைத்துள்ளன. அயோத்தியில் கிடைத்துள்ள கல்வெட்டு தரமான சமஸ்கிருதத்தில் வரிகளைக் கொண்டது. ஒரு தருமராஜனாக தன்னை கருதிக்கொண்ட மன்னர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக செய்த தானத்தை அது விளக்குகிறது. மேலும் அதிலுள்ள சில அம்சங்கள் வழக்காடு தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இவை கிமு ஒன்றாம் நூற்றாண்டினை சேர்ந்தவையாக உள்ளன. எனவே கிறிஸ்து வாழ்ந்ததாக நம்பப்படும் காலகட்டத்துக்குப் பின்னால் தோமா இங்கே வந்து தமிழரல்லாத மக்களிடம் கிறிஸ்தவ கருத்துகளை எடுத்து செல்ல உருவாக்கப்பட்ட மொழி சமஸ்கிருதம் என சொல்வது அப்பட்டமான பொய். (பார்க்க ரிச்சர்ட் சாலமோன், Indian Epigraphy, Oxford University Press, 1998)




**2. வேதங்களின் காலம் என்ன?**

நிச்சயமாக வேதங்களின் காலகட்டம் கிமு 2000த்தினை கீழ் எல்லையாக கொண்டதாக இருக்க வேண்டும் என்பது பல அறிஞர்களின் முடிவு. மாக்ஸ்முல்லர் போன்றவர்கள் கூட அதன் கீழ் எல்லையாக கிமு 1200 ஐ கொண்டு வந்தார்கள். இதற்கு கூட கிறிஸ்தவக் கோட்பாடான 'கிமு 4004 இல் யஹீவா தேவன் உலகத்தை படைத்தார்' என்ற மதநம்பிக்கை காரணமாக இருக்கலாம் என கருதப்படுகிறது. வேத இலக்கியம் குறித்த ஆராய்ச்சியில் முக்கியமானவராக கருதப்படும் கொலம்பிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எட்வின் பைரண்ட் பல தரவுகளின் அடிப்படையில் மிகக் கவனமாக கிமு 2500 என்பதற்கான வானியல் தரவுகளை ஏற்கிறார். ஆனால் அதில் உள்ள ஐயங்களையும் அவர் வெளிப்படுத்துகிறார். எட்வின் பைரண்ட் போன்ற அஜெண்டா இல்லாத ஆராய்ச்சியாளர்கள் செய்யும் காய்தல்-உவத்தல் இல்லாத காமம் செப்பாது கண்டது மொழியும் ஆராய்ச்சி நேர்மையை தமிழ் ஆர்வலர்கள் என தம்மை அழைத்துக்கொள்வோர் எய்துவார்கள் என நம்புகிறோம். (பார்க்க எட்வின் பைரண்ட், The quest for the origins of Vedic culture, Oxford University Press US, 2001)

**3.பரிணாம அறிவியல் வெறும் ஊகமா?**

உயிரியலாளர் சார்லஸ் டார்வினால் கண்டடையப்பட்ட பரிணாம அறிவியல் என்பது உடலை மட்டுமின்றி மனதின் பரிணாம வளர்ச்சியையும் சுட்டிக்காட்டுகிறது. பல மிகச்சிறந்த உண்மையான ஆன்மிகவியலாளர்கள் பரிணாம அறிவியலை அறிவியல் என ஏற்றுக்கொள்கின்றனர் என்பது மட்டுமல்ல, சிலர் அதற்கு பங்களிப்பும் செய்துள்ளனர். உதாரணமாக Homo erectus எனும் பழமையான மானுட பரிமாண தொல்லெச்சங்களை கண்டெடுத்தவரான தெயில் டி சார்டின் என்கிற ஏசுசபை இறையியலாளரை குறிப்பிடலாம். நமது நாட்டில் சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ அரவிந்தர் ஆகியோர் பரிணாம அறிவியலை உண்மை என கூறியுள்ளதுடன் அதனுடன்

இணைந்த ஆன்மிக-அறிவியல் பார்வை நம் பாரம்பரியத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். 'Not creation but manifestation is the voice of science today. அதனையே இந்துவும் சொல்லி வருகிறான்' என கூறியுள்ளதை சுட்டிக்காட்டுகிறோம். எனவே 'பரிணாம அறிவியல் அறிவியல் அல்ல அது வெறும் ஊகம்' என்பது போன்ற முலாம் பூசப்பட்ட அடிப்படைவாத கருத்தாக்கங்களை ஊக்குவிப்பது சக-மானுட சகோதரர்கள் என்ற முறையில் கத்தோலிக்க சபை எடுக்கும் இறையியல் முன்னேற்றத்துக்கு பின்னடைவு ஏற்படுத்தும் என்பதனை நேசத்துடன் கத்தோலிக்க மத-இறையியல் நிர்வாகிகளுக்கு கூறிட விழைகிறோம்.



**4. தெய்வநாயகத்தின் திரிபு வேலை: மேற்கோள் மோசடி**

ஏசுதான் நமது சைவ இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கு திருவாளர் தெய்வநாயகமும் தேவகலாவும் அடிக்கடி மேற்கோள் காட்டும் ஒரு பாடல் உண்டு.

உமாபதி தேவர் தமது 'போற்றிப் பஃறொடை' நூலில் கூறும் வரிகளான

*"இறவாத இன்பத்து எமை யிருத்த வேண்டிப்*
*பிறவா முதல்வன் பிறந்து"*

என்பதனை இவர்கள் பயன்படுத்துகின்றனர். இது ஏசு பிறந்து நமக்கெல்லாம் இறவா இன்பத்தை அளித்ததாக இவர் கூறுகிறார். ஆனால் உண்மை என்ன என்பதனை சைவ சித்தாந்த பண்டிதரான அருணை வடிவேல் முதலியார் விளக்கும் பபோது இவர்கள் செய்துள்ள திரிபு வேலை புரியும். "'பிறவா முதல்வன் கடவுள் அவன் பிறந்தது ஏசு கிறிஸ்துவாக' என்கிறார் [தெய்வநாயகம்]. அவ்வாறாயின் அதையடுத்தே அந்த உமாபதி சிவாசாரியர், 'இயேசு கிறிஸ்து எனப்பேர் புனைந்து' என்று கூறாமல் 'சம்பந்த நாதன்' எனப்பேர் புனைந்து என ஏன் கூறினார்? 'இயேசு கிறிஸ்து' என்னும் பெயர் கிபி 13-ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் இடம்பெறவில்லையோ? தம்மால் குறிக்கப்படுகின்ற ஒருவர் பெயர் தமக்குத் தெரியவில்லை என்றால் அது பற்றி வாய் திறக்காமல் இருப்பதுதானே தக்கது? அதைவிட்டு பேர்புனைந்தமையை ஏன் கூற முற்படவேண்டும்? அதுவும், கூற முற்பட்டு 'சம்பந்த நாதன்' என வேறு ஓர் பெயரைத் தாமே கட்டி கூறுவதுதான் பெரியவர்க்கு அழகோ? இவர், தாம் பொய் சொல்ல துணிந்து பேரருள் ஆசிரியரைப் பொய்யர் ஆக்குகின்றார்." (மகாவித்துவான் அருணை

வடிவேல் முதலியார், விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் ஒப்பாய்வின் மறுப்புரை பக்.308)

அது மட்டுமல்ல உமாபதி சிவாசாரியாரின் குரு சம்பந்த நாத தேவர் குறித்து அவரே ஒரு பாடல் இயற்றியுள்ளார் அதில் உமாபதி சிவாசாரியார் அருளியிருப்பதாவது:

பார் திகழ வளர்சாம வேதம் மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட
சைவசிகாமணி மருதைத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில் புடைசூழ் மதில் மீதே மதியம்
கடவாமை நெடுங்கொடிகள் கரந்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம்.

உமாபதி தேவர்க்கு ஞானாசாரியராய் விளங்கி ஞானத்தை அருளியவரது பெயர் மறை ஞான சம்பந்தர் என்பதும் இவர் சாமவேத பிரிவில் பராசர கோத்திரத்தில் தோன்றியவர் என்பதும் இதனால் விளங்கும். ஆனால் கூசாமல் அடுத்த வரியை மறைத்து உமாபதி சிவாசாரியார் ஏசுவை குறித்து பாடியுள்ளதாக பொருள் பட இதனை இவரும் இவரது புதல்வியாரும் சொல்லி பிரச்சாரம் செய்வது எத்தனை பிழை! இதனை அறியாத கிறீஸ்தவ சகோதரர்களோ இதனை உண்மை என நம்பி இதே திரிபுகளை இந்து மக்களிடம் பிரச்சாரம் செய்தால் அவர்கள் தெரியாமல் செய்யும் இத்தவறுகளை மன்னித்துவிட வேண்டியது இந்துக்களின் கடமை என்பதனை சொல்ல தமிழ் இந்து.காம் விரும்புகிறது. அத்துடன் இத்திரிப்பு வேலையை தெரிந்தே செய்யும் தெய்வநாயகத்தையும் அவர் வழியை பின்பற்றும் அவர் மகள் தேவகலாவையும் கூட நாம் ஆத்திரம் அடையாமல் மன்னித்துவிட வேண்டும் என தமிழ் இந்து சமுதாயத்தை தமிழ் இந்து.காம் கேட்டுக்கொள்கிறது.

பார்க்க: மகாவித்துவான் அருணை வடிவேல் முதலியார், விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் ஒப்பாய்வின் மறுப்புரை அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் 1991

### 5. மூவொருமை (Trinity) கோட்பாடு என்பது கிறிஸ்துவுக்கு பின்னால்தான் இந்தியாவில் உருவானதா?

முனைவர் தேவகலாவும் முனைவர் தெய்வநாயகமும் மீண்டும் மீண்டும் சொல்லும் ஒரு விஷயம் மூவொருவர் எனும் கோட்பாடு கிறிஸ்தவத்திலிருந்து தோமாவால் கொண்டு வரப்பட்டு இந்தியாவில் சிலைகளிலும் சிற்பங்களிலும் வந்தது என்பது. எலிபந்தா குகை மூன்று தலை கொண்ட மகாதேவர் சிற்பமானது தோமா கொண்டு வந்த ஆதி கிறிஸ்தவக் கோட்பாட்டினை விளக்க செய்யப்பட்டதன் விளைவு என்பதாகும். இது எந்த அளவு உண்மை? கிறிஸ்து வாழ்ந்ததாகக் கூறப்பட்ட காலகட்டத்துக்கு முன்னதாக மூவொருமைக் கோட்பாட்டினை காணும் வடிவங்களை நாம் காணவே முடியாதா என்பது கேள்வி. இதற்கான விடை நாம் நிச்சயமாகக் காணமுடியும் என்பதே. சிந்து சமவெளி பண்பாட்டில் மூன்று தலை கொண்டு யோகத்திலமர்ந்த கடவுள் வடிவம் இருப்பதாக சர் ஜாண் மார்ஷலே கூறியுள்ளார். அத்துடன் அதீத தன்மை கொண்ட

விலங்குகள் (supernatural) என்பவை பொதுவாக தெய்வீகத்தைக் காட்டும் குறியீட்டுத்தன்மை கொண்டவையாக விளங்கும். உதாரணமாக சீன பண்பாட்டில் பூதநாகங்கள் (dragons) அதைப் போலவே சிந்து சமவெளி பண்பாட்டில் மூன்று தலையும் ஒருடலும் கொண்ட விலங்கின் உருவம் இப்பண்பாட்டு முத்திரைகளில் கிடைத்துள்ளது. மூவொருமை கோட்பாட்டின் தொடக்கமாக இம்முத்திரையை கருத முடியும். மேலும் தெய்வநாயகம்-தேவகலா ஆகியோர் சொன்னதை பொய்ப்பிக்கும் ஆதாரமாக மூன்று தலை கொண்ட சிவன் வடிவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் உஜ்ஜயினியில் கிடைத்துள்ளன. மட்டுமல்ல கார்த்திகேய ஸ்கந்தன் உருவ நாணயங்களும் கிட்டியுள்ளன.





பார்க்க:

John Hubert Marshall & John Marshall, Mohenjo-Daro and the Indus Civilization, லண்டன் 1931:Asian Educational Services, 2004
J.Allen, Catalogue of the coins of ancient India, Reprint 1975:
Doris Srinivasan, Many Heads, Arms, and Eyes: Origin, Meaning, and Form of Multiplicity in Indian Art, BRILL, 1997

### 6. கடவுள் மனிதனாக வருவார் எனும் கோட்பாடு கிறிஸ்துவுக்கு பின்னர்தான் இந்தியாவுக்கு வந்ததா?

"இந்த கருட ஸ்தம்பமானது தேவர்களுக்கெல்லாம் தேவரான வாசுதேவருடையது. இது விஷ்ணு பக்தனும், தியோனின் மகனும் தட்சசீலவாசியும் கிரேக்க அரசரின் தூதனாக காசிபுத்ர பகபத்ரனிடம் வந்தவனுமான ஹிலியோடாரஸால் நிறுவப்பட்டது" என சொல்லும் ஸ்தம்ப கல்வெட்டானது மேலும் மோட்சத்தை அடைவதற்கான மூன்று வழிகளாவன சுயகட்டுப்பாடு, தருமம் செய்தல் மற்றும் உணர்வுடன் வாழ்தல் என கூறுகிறது. இதன் காலமானது கிமு 113. வட மேற்கு மத்திய பிரதேசத்தில் விளங்கும் 'ஹிலியோடரோ ரஸ் தூண்' எனப்படும் இத்தூண் கிருஷ்ண/வாசுதேவ வழிபாட்டையும் கிருஷ்ணர் விஷ்ணுவின் அவதாரமாக வழிபடப்பட்டதையும் அவ்வாறு வழிபடப்பட்ட மதமானது மோட்சம் குறித்து பேசுவதையும் காணமுடிகிறது. இந்த வழிபாட்டு முறை எந்த அளவு செழுமை பெற்றிருந்தால் ஒரு கிரேக்க தூதனே தன்னை வாசுதேவனின் பக்தனாக அறிவிப்பான் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கிறிஸ்து

வாழ்ந்ததாகக் கருதப்படும் காலகட்டத்துக்கு முந்தைய காலகட்டத்தில் (அதாவது கிமு) பல பட்டயங்களில் கிருஷ்ண-வாசுதேவ வழிபாடு குறிப்பிடப்படுகிறது. இந்நிலையில் அவதாரக் கோட்பாடே காலத்தால் பிற்பட்ட கிறிஸ்தவத்திலிருந்து வந்தது என கூறுவது வரலாற்று தரவுகளின் படி தவறாகும்.






பார்க்க:

எட்வின் பைரண்ட் கொலம்பிய பல்கலைக்கழகம் Krishna - a source book, Oxford University Press 2007

## 7. குமரி கண்டம் : மானுட இனத்தின் தோற்றம்

இது உண்மையா? அறிவியல் இல்லை என்று சொல்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆப்பிரிக்காவிலிருந்து மானுட இனம் உருவானதை மூலக்கூறு மரபணுவியல் படம் பிடித்து காட்டுவதை ஜூலை 'ஸயிண்டிஃபிக் அமெரிக்கன்' காட்டியுள்ளதை காணும்படி தமிழ் அறிஞர்களைக் கோருகிறோம். புகழ்பெற்ற நிலவியல் ஆய்வாளரான சு.கிறிஸ்டோபர் ஜெயகரன் அண்மையில் வெளியான தமது 'குமரி நில நீட்சி' எனும் நூலில் இத்தகைய கற்பனைகள் 'கவித்துவ சுதந்திரத்துடன்' அதீத தமிழ் பற்றினால் உருவாக்கப்பட்டவையென்பதுடன் இவற்றிற்கு அறிவியல் அடிப்படை எதுவும் இல்லையெனக் காட்டுகிறார். எனில் கடல் கொண்ட குமரிக்கோடு என்பது வெறும் கற்பனைதானா? நிலவியல் ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி இலக்கிய ஆதாரங்கள் மற்றும் தொல் மானுடவியல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு யதார்த்த நிலைப்பாட்டினை தன் முடிவாக தருகிறார் ஜெயகரன். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழகம் இலங்கை கடற்கரைகளை ஒட்டியிருந்து பின்னர் கடலில் மூழ்கிய நிலப்பரப்புகளே குமரி எனும் நிலநீட்சி எனும் மரபின் வித்தாகும் என கருதும் ஜெயகரன் அவ்வாறு கடல் நீர்மட்ட உயர்வில் உயிர் தப்பியவர்களிடமிருந்து குமரி நிலநீட்சி குறித்த நினைவு இன்றும் நம்மிடம் நிலவுவதாகக் கூறுகிறார்.

ஆப்பிரிக்காவில் உருவான மானுட இனத்தின் தொல்-ப்ழங்கால புலப்பெயர்ச்சி குறித்து மூலக்கூறு மரபணு சோதனைகளின் அடிப்படையில் அறிவியலாளர் உருவாக்கிய மாதிரி




நன்றி : Andrea Rinaldi EMBO reports 8,2, 121-125 (2007) www.nature.com

**8. பாவமன்னிப்புக்கு இரத்த பலி இன்றியமையாததா? உண்மையான யூத தரவுகள் சொல்வது என்ன?**

*உன் வார்த்தையின்படியே உன்னை மன்னித்தேன்* - யூதத்திருமறை : எண்ணிக்கை 14:20

*இரத்தம் சிந்துதல் இன்றி பாவமன்னிப்பு இல்லை* - கிறிஸ்தவ மறைநூல் : எபிரேயர் 9:22

முனைவர் தெய்வநாயகம் இரத்தபலி என்பது ஏசுவுக்கு முந்தைய நிலையில் இருந்தது என்கிறார். ஏசுவுக்கு முந்தைய நிலையில் பாவமன்னிப்பு இல்லை - அது இரத்த பலியின் மூலம் மட்டுமே நடப்பதாக இருந்தது என்றும் கூறுகிறார். ஏசுவுக்கு முந்தைய நிலையில் இருந்த இந்த நிலை ஏசு சிலுவையில் அறையப்பட்டதன் மூலம் பலி நிறைவு என்னும் நிலையில் இரத்த/உயிர் பலியின் அவசியத்தை இல்லாமல் ஆக்கிவிட்டது என்கிறார். இதனை தமிழகம் வரை நீட்டுகிறார் முனைவர். தெய்வநாயகம். தமிழகம் வரை ஏன் ஏசு பிறந்ததாகக் கூறப்படும் யூத சமுதாயத்திலேயே இரத்தபலி இன்றியே மன்னிப்பு என்கிற கோட்பாடு இருப்பதை ஏனோ முனைவர் தெய்வநாயகம் மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு இவ்வாறு கூறுகிறார், பொதுவாகவே இந்த கிறிஸ்தவ பிரச்சாரம் குறித்து யூத மறை அறிஞர் மைக்கேல் லெவி 'True Messiah

Project' எனும் ஆராய்ச்சி தளத்தில் இரத்தபலி பாவ மன்னிப்புக்கு இன்றியமையாததல்ல என தெளிவாகக் காட்டுகிறார். உதாரணமாக யூதத்திருமறையில் யூதர்கள் வணங்கும் இறைவன் கூறுகிறார்: "நான் மழை பெய்யாதவாறு வானத்தை அடைத்தாலும் நாட்டை அழிக்க வெட்டுக்கிளிகளுக்கு கட்டளையிட்டாலும், என் மக்களிடையே கொள்ளை நோயை அனுப்பினாலும் எனது பெயரை போற்றிடும் எனது மக்கள் சிறுமையுற்று தங்கள் பாவங்களிலிருந்து மனம் வருந்தி இரந்து மன்றாடி என் திருமுகத்தை நாடினால் வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுகளைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன்: அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன்" [யூதத்திருமறை: குறிப்பேடு இரண்டாம் நூல் 7:14]

மேலும் ரபாய் லெவி பலியில்லாமல் மக்கள் இறைவனால் மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி ஒன்றும் யூதத்திருமறையிலேயே இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்: "நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள்: பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக்கொண்டனர். இந்த செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி அரச உடையைக் களைந்துவிட்டு சாக்கு உடை உடுத்திக்கொண்டு சாம்பல் மீது உட்கார்ந்தான். மேலும் அவன் ஓர் ஆணையை பிறப்பித்து அதை நினிவே முழுவதும் பறைச்சாற்றச் செய்தான். இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது: எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக்கூடாது. ஆடு மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது. மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக்கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும்: தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும். இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார்: அவரது கடுஞ்சினமும் தணியும்: நமக்கு அழிவு வராது. கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார்: தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை. [யூதத்திருமறை யோனா 3:5-10]

இங்கு மக்கள் பலி கொடுக்கவில்லை. பட்டினி மட்டுமே இருக்கிறார்கள். நோன்பு நோற்பதன் மூலம் அவர்கள் நம்பும் ஆண்டவன் அவர்களை மன்னித்துவிட்டதாக யூதத்திருமறை கூறுகிறது. எனவே ஏசு வந்தது தம்மை பலியாக்கி கொண்டதான ஐதீகம் வழங்கப்படுவதற்கு முன்னரே ஆண்டவனை பலி கொடுக்காமல் நோன்பின் மூலம் மன்னிப்பு பெறும் பழக்கம் யூதத்திருமறையில் கூறப்பட்டுள்ளது. மேலும் பாடல்கள் மூலம் தோத்தரிப்பதே யூதம் வணங்கிய ஆண்டவருக்கு உகந்தது என்பதையும் யூதத்த்ருமறை கூறுகிறது. பலியும் தேவை இல்லை நோன்பும் தேவை இல்லை என்ற நிலையில் தோத்தரிப்பு பாடல்கள் மூலம் ஆண்டவன் மகிழ்ச்சி அடைகிறார். "கடவுளின் பெயரை நான் பாடிப் புகழ்வேன்: அவருக்கு நன்றி செலுத்தி அவரை மாட்சிமைப்படுத்துவேன், காளையை விட இதுவே ஆண்டவருக்கு உகந்தது: கொம்பும் விரிகுளம்பும் உள்ள எருதைவிட இதுவே அவருக்கு உகந்தது." [யூதத்திருமறை திருப்பாடல்கள் 69:30-32]

ஆக பலி கொடுத்து அல்லது நோன்பின் மூலம் ஆண்டவனிடமிருந்து பாவமன்னிப்பு பெறுவது: பலியை விட ஆண்டவ்ருக்கு தோத்திரப்பாடல்களே பிரியமானது என மூன்று நிலைகளில் எதன் மூலமும் மன்னிப்பு பெறலாம் என யூதத்திருமறையில் சொல்லப்படுவதால் 'இரத்தம் சிந்துவதன் மூலம் பாவம்மன்னிப்பு பெறலாம் எனும் கிறித்துவ மறைநூல் : எபிரேயர் 9:22 இதற்கு மூந்தையதான யூத சமயத்துடன் தொடர்புடையது போல மயக்கம் அளிக்கும் - ஆனால் உண்மையில் தொடர்பற்ற ஒரு கிறிஸ்தவ கோட்பாடு மட்டுமே. அதற்கு வரலாறு உண்மைகள் கிடையாது என்பது புலனாகிறது.

நன்றி: 'Blood Sacrifice', மைக்கேல் லெவி, Messiah Truth Project

வழங்குவோர் www.tamilhindu.com